1990 மார்ச் 20]

தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கல்.

*3054 திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

ஆலங்குளம் வட்டாரத்திற்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம் விரைவில் முடித்துக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆலங்குளம் வட்டாரத்திற்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க அரசாணை எண்.380, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 27–6–89 மூலம் திட்டத்திற்கான ஆய்வுப்பணிகள் முடிக்கப் பெறுவதற்கும், தொழில் நுட்ப ஒப்புதல், நிர்வாக ஒப்புதல் பெறுவதற்கும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. தற்போது திட்ட மதிப்பீட்டை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கூட்டு ஆறு அதாவது தாமிரபரணி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக ஆலங்குளம் வட்டாரப் பகுதி சங்கரன்கோவில் வரை இந்தத் திட்டத்தை நிறைவேற்று வதற்காக ஆய்வு நடத்தப்படுகிறது என்று சொல்லியிருக்கிறீகள். இந்த ஆய்வு பல ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை சொல்வார்களா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டகாலமாக இது செயல்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, நான் முன்னே குறிப்பிட்ட ஆணைப்படி 27–6–89 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதற்கான ஆய்வுப்பணிகள் இப்பொழுது நடைபெறுகின்றன. விரைவில் அதை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10.00 மணி

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு ; தலைவர் அவர்களே, ஆலங்குளம் பகுதியில் மக்கள் குடிதண்ணீர் பிரச்சினையால் மிகவும் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற குடிதண்ணீர் பிரச்சினை சங்கரன்கோவில் பகுதியிலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளிலும் இருப்பதால் அங்கெல்லாம் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

எனவே, இந்தத் திட்டத்தை அரசு விரைவாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள பனகுந்தாபுரம், வாடியூர், அச்சங்குண்டம், மரியதாய்புரம், லட்சுமிபுரம், கீழகலிங்கல், மேலகலிங்கல் போன்ற கிராமங்கள் இந்த ஆய்வில் சேர்க்கப்படாமல் இருப்பதால் அவற்றையும் சேர்த்து அவற்றிற்கும் குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களை அரசு குறிப்பில் ஏற்றுக்கொண்டு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ய மாநில அரசுகள் முன் வந்தால் உதவுவதாக மத்திய அரசு வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நம்முடைய மத்திய அரசு வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்து இருப்பதில் 1989 அக்டோபர் 2-ம் தேதியன்று நிலுவையில் இருந்த விவசாயிகளுடைய கடன்களை 10,000 ரூபாய் வரையில் மத்திய அரசு தள்ளுபடி செய்யும் என்று அறிவித்து விட்டு, மாநிலங்களில் கூட்டுறவுத் துறையில் வாங்கியிருக்கக்கூடிய கடன்கள் சம்பந்தமாக மாநில அரசுகள் அதுபற்றி பரிசீலித்து தள்ளுபடி செய்தால் அதற்குரிய தொகையை மத்திய அரசு வழங்கும் என்று நிதியமைச்சர் அவர்கள் நாடாளு மன்றத்தில் அறிவித்து இருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. எனவே, இதை கருத்திற்கொண்டு தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுடைய கடன்களை, கூட்டுறவுக் கடன்களை, 10,000 ரூபாய் அளவிற்கு அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு தள்ளுபடி செய்து, விவசாயிகளை கடன்களிலிருந்து விடுவிக்க அரசு உரிய அறிவிப்பை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய நிதியமைச்சர் அவர்கள் நேற்று முன்வைத்துள்ள வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள